2013 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுபோன்ற உயர் கோபுரங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால், அது கூடுதலான மின்சாரத்தை ஈர்க்கின்ற காரணத்தினால், அதைத் தவிர்ப்பதற்காக இப்போது உயர்மட்ட கோபுர மின் விளக்குகள் அமைப்பதற்கு அனுமதி கொடுப்பதில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் தவிர்த்து, மின்சாரத்தை மிச்சப்படுத்தக்கூடிய வகையிலே கொண்டுவருகின்ற திட்டங்களுக்கு உதவும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

23—

கல்லூரிகள்

*14443—**திரு. ம. கலை அரசு:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அணைக்கட்டு தொகுதியில் கலைக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அணைக்கட்டு தொகுதியில் கலைக் கல்லூரி மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதி சாதாரண, சாமானிய,

ஏழையெளிய மக்கள் வசிக்கக்கூடிய தொகுதியாகும். இன்றைக்குப் பள்ளிக் கல்வியை முடித்துவிட்டு, உயர் கல்வி பெறமுடியாதவர்களுடைய எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது என்கின்ற எண்ணம் மக்களிடையே இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கல்வித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு வழங்குவது தமிழ்நாட்டு மக்களை அறியாமையிலிருந்து அறிவாளிகளாக ஆக்கக்கூடிய முயற்சியில் ஈடுபட்டிருப்பதற்கு ஒரு உதாரணமாகும்.

கடந்த ஆண்டு 18-4-2012 அன்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டார்கள்; தமிழ்நாட்டில் 11 கல்லூரிகள் தொடங்கப்படும் என்கின்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியை வெளியிட்டார்கள். காரணம், கல்வி ஒன்றுதான் அழியாத செல்வம். மற்ற செல்வங்கள் எல்லாம் வரும், போகும், காணாமலும் போகும். ஆனால் கல்வியை ஒருவன் பெற்றுவிட்டால், அவன் சமுதாயத்தில் அந்தஸ்து உடையவனாக, மதிக்கப்படக்கூடியவனாக, மற்றவர்களால் போற்றப்படக்கூடியவனாக இருப்பான் என்கின்ற உயரிய நோக்கத்தோடு, கல்விக்கு அதிக நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தமட்டில், சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்கள் சொல்வார்கள்; மருத்துவம் (குறுக்கீடுகள்) இது கேள்விதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. கலை அரசு, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ம. கலை அரசு: கேள்விதான் இது. கேள்விக்குத்தான் வருகிறேன். கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்ற துறைகளில் எந்தவொரு நாடு சிறந்து விளங்குகின்றதோ, அந்த நாடு எல்லா வகையிலும் மற்ற நாடுகளோடு போட்டி போடுகின்ற அளவிற்கு உயர்ந்து நிற்கும் என்று சொல்வார்கள். அந்த வகையில், இன்றைக்கு நல்லாட்சி செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லக்கூடிய நீங்கள், (குறுக்கீடுகள்) சொல்லக்கூடிய நாங்கள் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் அவர்கள்தான் முதலமைச்சர் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்த வகையில், கல்வியை மேம்படுத்துகின்ற வகையில், மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கக்கூடிய அணைக்கட்டு தொகுதியில் ஒரு கல்வி நிறுவனத்தை, அரசுக் கல்லூரியையோ அல்லது தொழில்நுட்பக்

கல்லூரியையோ அமைத்துத் தரவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதனைத் தமிழக அரசு கண்டிப்பாகச் செய்யும் என்ற நம்பிக்கையும் இருக்கிறது. காரணம், நான் ஏற்கெனவே வேலூரிலே போக்குவரத்து மண்டல அலுவலகம் வேண்டுமென்று கேட்டேன்; அதனைச் செய்து கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. ம. கலை அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு செய்த நல்ல காரியத்தை நான் சொல்லக் கூடாதா? (குறுக்கீடுகள்) அரசு செய்த நல்ல காரியத்தை நான் சொல்லக் கூடாதா? சொல்ல வேண்டாமென்று சொல்லுங்கள். நான் சொல்லாமல் விட்டுவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. ம. கலை அரசு: *இதையெல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல, எனது தொகுதிக்கு அரசுக் கல்லூரி வேண்டுமென்றுதான் கேட்கின்றேன். அதேபோல, மருத்துவக் கல்லூரிக்கும் டயாலிசிஸ் கருவி வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டேன்; அதையும் கொடுத்தார்கள்; மகிழ்ச்சி; வரவேற்கின்றோம். அதேபோல், சுத்திகரிப்பு நிலையம் வேண்டுமென்று கேட்டோம்; கொடுத்தார்கள்; மகிழ்ச்சி. அதேபோல இன்றைக்கு அணைக்கட்டு தொகுதியில் கண்டிப்பாக ஒரு அரசுக் கல்லூரியோ அல்லது தொழில்நுட்பக் கல்லூரியோ அமைத்துத்தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அதைச் செய்வார்கள் என்றும் நம்புகின்றேன்.*

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். பள்ளிக் கல்வி முடித்தவுடன், உயர் கல்வி பெற முடியாதவர்களின் எண்ணிக்கை*

குறைந்து வருகிறது என்ற கருத்தை முதலாவதாகச் சொல்லியிருக்கிறார்கள்; மகிழ்ச்சி. பள்ளிக் கல்வியை முடித்தவுடன் உயர் கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்துடன், வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு 2011-2012 ஆம் ஆண்டில் 11 கலைக் கல்லூரிகளை உருவாக்கித் தந்தார்கள். இந்தப் பெருமை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதோடுமட்டுமல்லாமல், 2012-2013 ஆம் ஆண்டில், மேலும் 11 கலைக் கல்லூரிகளை உருவாக்கித் தந்து, இதுவரையில், ஆட்சி அமைந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக 22 கலைக் கல்லூரிகளை உருவாக்கித் தந்த பெருமை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களையே சாரும். மேலும், சமீபத்தில் நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கருத்துக்கேற்ப, எந்தெந்தப் பகுதிகளில் ஏழை எளிய மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடித்து உயர் கல்வியில் சேர வேண்டுமென்ற நிலை இருக்கிறதோ, எங்கே அதிகமாக தேவைப்படுகிறதோ, அந்தப் பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வலியுறுத்தியதற்கிணங்க 9 புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்க ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளிப் படிப்பை முடித்து, உயர் கல்வி சேரும் மாணவர்களின் எண்ணிக்கை உயருகிற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரண்டாவதாகக் கூறியதைப்போல, இந்தியாவிலேயே சமூக நலன், சுகாதாரம் மற்றும் கல்வித் துறையில் முதன்மை மாநிலமாக விளங்குகிற மாநிலம், தமிழ்நாடு மாநிலம் என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்த வேலூர் மாவட்டத்தில் இரண்டு கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. 2011-2012 ஆம் ஆண்டில், வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் புதிய அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு, நல்ல

முறையில் இயங்கி வருகிறது. 2012-2013 ஆம் ஆண்டில், அரக்கோணம் தொகுதியில் ஒரு புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல, அவருடைய மாவட்டம் ஜோலார்பேட்டையில் ஒரு புதிய தொழில்நுட்பக் கல்லூரியை இந்த ஆண்டு தொடங்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மொத்தமாக ஆரம்பிக்கப்பட்ட கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை 10 ஆகும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 22 கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதோடுமட்டுமல்லாமல், இன்றைக்கு தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு, ஆட்சி அமைத்த இரண்டு ஆண்டுகளில் 45 கல்லூரிகளை வழங்கிய பெருமை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களையே சாரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை, எளிய மாணவர்கள் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு இதுபோன்ற புதிய, புதிய கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. அதுவும், நகர்ப்புறங்களில் அல்லாமல், கிராமப்புறங்களில், மாவட்டத்தின் மூலை, முடுக்குகளில் இருக்கக்கூடிய, தொலைதூரங்களில் இருக்கக்கூடிய மாணவர்கள் உயர் கல்வி பெற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இதுபோன்ற கல்லூரிகளைத் தொடங்கி வருகிறார்கள். அதேபோல, நிச்சயமாக தேவையிருப்பின், தேவையின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் தொகுதியிலும் அந்தக் கல்லூரி அமைக்கும் காலம் வரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதியில் கண்டிப்பாக கல்லூரி அமைக்கப்படும் என்ற உத்தரவாதத்தினை தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.*

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் இயங்கி வரும் பாரதியார் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்லூரியை தரம் உயர்த்தி, அரசு கலைக் கல்லூரியாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அக்கல்லூரியில் கலை பாடப் பிரிவுகள் மட்டுமே பயிற்றுவிக்கப்படுகின்றன. எனவே, அக்கல்லூரியில்* Physics, Chemistry, Biology, Botany, Geology *போன்ற அறிவியல் பாடப் பிரிவுகளையும் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதி தோட்டத் தொழிலாளர்கள், ஏழை மக்கள் அதிகமாக வசிக்கக்கூடிய பகுதி. எனவே, அக்கல்லூரியில் அறிவியல் பாடப் பிரிவுகளைத் தொடங்கவும், அக்கல்லூரியினை அரசுக் கல்லூரியாக மாற்றவும் அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகள் ஆரம்பிக்கப்படும்போது பல்வேறு வகைகளில் ஆரம்பிக்கப்படுகின்றன. பொதுவாக அரசு சார்பாக கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுகின்றன; அரசு சார்பாக உறுப்புக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுகின்றன; சில நேரங்களில் அந்தந்தப் பல்கலைக்கழகங்களே சில உறுப்புக் கல்லூரிகளை ஆரம்பித்துக்கொள்ளலாம். அதனடிப்படையில், தற்போது தமிழகத்தில் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டு, மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கல்லூரி, பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரி ஆகும். அக்கல்லூரியில் தற்பொழுது ஆசிரியர்கள் பணியாற்றி வருகிறார்கள்; மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அக்கல்லூரியினை அரசுக் கல்லூரியாக மாற்றுவதற்கான வாய்ப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், அக்கல்லூரியில் அறிவியல் பாடப் பிரிவுகள் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை*

வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையோடு, அக்கல்லூரியிலிருந்து புதிய பாடப் பிரிவுகள் தொடங்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வரப்பெறுகிற காலகட்டத்தில், அங்கு புதிய பாடப் பிரிவுகள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி அமைந்த பிறகு, இதுவரை இல்லாத அளவிற்கு, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 400 பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 400 பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டதன் காரணமாக, உதவிப் பேராசிரியர்கள் பணியிடங்களை நிரப்புவதற்கான வாய்ப்பும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. பரமசிவம் அவர்கள்.

திரு. கே.பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற்பாதம் தொட்டு வணங்குகின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 3 ஆவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழகம் மட்டுமல்ல, இந்திய துணைக் கண்டம் மட்டுமல்ல, உலகத்தில் இருக்கின்ற வல்லரசு நாடுகள் எல்லாம் சிந்திக்கின்ற, பாராட்டுகின்ற வகையில் தமிழகத்தை வழி நடத்துகின்ற இவ்வேளையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 2 ஆவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது பல்லடம் தொகுதியிலே, கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஒரு கலைக் கல்லூரியை 2005-2006 ஆம் ஆண்டு கொண்டுவந்தார்கள். அதற்குப் பின்னால் வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கொண்டுவந்த திட்டம் என்கின்ற ஒரே காரணத்திற்காக அதை இரத்து செய்துவிட்டார்கள். மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அம்மா அவர்களிடத்திலே கூறி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களிடத்திலே ஒப்புதல் பெற்று, பல்லடம் தொகுதிக்கு

கலைக் கல்லூரியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். திருப்பூர் மாவட்டத்திலே மத்தியப் பகுதியிலே அமைந்திருக்கின்ற தொகுதி பல்லடம் தொகுதி. திருப்பூர் மாவட்டத்திலே அதிக வாக்காளர்களைக் கொண்ட தொகுதி பல்லடம் தொகுதி என்பதைப் பணிவோடு தெரிவித்து அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சார்ந்து இருக்கிற சட்டமன்றத் தொகுதியில் ஒரு கல்லூரி தொடங்கப்பட்டு, அது கடந்த ஆட்சிக் காலத்தில் இரத்து செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்தை வெளிப்படுத்தி இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கான அறிவிப்புகளை துறைவாரியாக ஆய்வு செய்து, அப்படி இரத்து செய்திருந்தால், முறைகேடுகள் நடந்திருந்தால், மீண்டும் அந்தக் கல்லூரியைத் தொடங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். வெங்கடேசன் அவர்கள்.*

திரு. எஸ். வெங்கடேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருக்கோவிலூர் தொகுதிக்கு உட்பட்ட திருவெண்ணெய்நல்லூரிலே 2009-2010 ஆம் நிதியாண்டு ரூபாய் 7½ கோடி நிதி ஒதுக்கப்பட்டு, அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, ஒப்பந்தமும் செய்யப்பட்டது. ஆனால் இன்றுவரையிலே அந்தப் பணி தொடங்கப்படவில்லை. நிதி ஆதாரம் இல்லை என்ற காரணத்தினால் பணி தொடங்கப்படவில்லை என அதிகாரிகள் கூறுகின்றனர். உடனடியாக இந்தப் பணியைத் துவக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 பிப்ரவரி 7]

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து தொழில்நுட்பக் கல்லூரியா, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியா அல்லது பொறியியல் கல்லூரியா என்பதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

திரு. எஸ். வெங்கடேசன்: *அரசு கலைக் கல்லூரி.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சார்ந்திருக்கிற அந்தத் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி தொடங்கப்பட்டு, நிதியும் வழங்கப்பட்டு, ஆனால் இன்னும் கட்டடப் பணிகள் அங்கே தொடங்கப்படவில்லை என்ற கருத்தைச் சொல்லி இருக்கிறார். ஏற்கெனவே தமிழகத்திலே நடந்துகொண்டிருக்கிற கல்லூரிகளுக்கெல்லாம் எங்கெங்கெல்லாம் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறதோ, அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்காக மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ.7.25 கோடி நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே தமிழகத்தில் கட்டடம் இல்லாமல் இருக்கிற அத்தனைக் கல்லூரிகளுக்கும் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

கூட்டுறவு வங்கி

***6402—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் நிதி நிலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS